
# எமது சேமிப்பை நாம் எவ்வாறு பாதுகாப்பாக வளர்ச்சியடைய செய்யலாம்?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

01. சேமிப்பு என்றால் என்ன?

02. நாம் எமது சேமிப்பை எதற்காக முதலீடாக மாற்றவேண்டும்?

03. பங்குச்சந்தை என்றால் என்ன?

04. பங்குச்சந்தை முதலீட்டின் மூலம் எமக்கு கிடைக்கும் அனுகூலங்கள் என்ன?

05. பங்குச்சந்தை முதலீட்டில் நாம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் என்ன?

06. நாம் எவ்வாறு பங்குச் சந்தையில் முதலீடு செய்வது?

07. கணக்கினை ஆரம்பித்த பின்னர் நாம் எவ்வாறு பங்குமுதலீட்டினை தொடரலாம்?

08. எவ்வாறு நாம் மத்திய வைப்புத்திட்ட கணக்கில் உள்ள எமது பங்குகளை விற்பனை செய்யலாம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேமிப்பு என்றால் என்ன?

சேமிப்பு என்பது எதிர்காலத்தில் எமக்கு ஏற்படக்கூடிய ஓர் தேவையின் நிமித்தம் நாம் காலாகாலம் கிரமமாக ஒரு தொகைப் பணத்தை எமது வருவாயிலிருந்து ஒதுக்கி வைத்தல் சேமிப்பென்று பொருள்படும்.

எமது வருமானத்திலிருந்து செலவுகளை மேற்கொண்டதன் பின்னர் ஏதாவது பணம் எஞ்சியிருப்பின் அதனை நாம் சேமிப்பாக கருதமுடியாது. ஏனெனில் சில மாதங்களில் எமது செலவுகள் வருமானத்தையும் பார்க்க அதிகரிக்கும் பொழுது எம்மால் அம்மாதத்தில் எதனையும் சேமிக்க முடியாமல் போகின்றது. எனவே நாம் எமது வருமானத்தில் முதலாவதாக சேமிக்கும் தொகையினை ஒதுக்கி வைத்துவிட்டு எஞ்சிய வருமானத்தில் எமது செலவுகளை கட்டுப்படுத்தல் அவசியமாகும்.

இதனையே உலகளாவிய ரீதியில் மிகவும் பிரசித்திப்பெற்ற முதலீட்டாளரும் பிரபல செல்வந்தருமான வரன் வ.்.பட் (Warren Buffett) அவர்கள் பின்வரும் சூத்திரத்தின் மூலம் கூறுகின்றார்.

வருமானம் - சேமிப்பு = செலவு. இதன்மூலம் அவர் கூறுவது என்னவெனில் வருமானத்தில் முதலாவதாக நாங்கள் சேமிப்பிற்கு ஒதுக்கிவைத்த தொகை போக எஞ்சிய தொகையினுள்ளே தான் எங்களது அனைத்து செலவுகளையும் கட்டுப்படுத்துமாறு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாம் எமது சேமிப்பை எதற்காக முதலீடாக மாற்றவேண்டும்?

எம்மில் அனேகமானோர் ஓர் எதிர்கால குறிக்கோளை இலக்கு வைத்து சேமிப்பினை மேற்கொள்கின்றோம். இங்கு சேமிக்கும் பணம் முழுவதும் சேமிப்புக்குக் கணக்கில் மாத்திரம் வைப்பிலுடுவதன் மூலம் எமது எதிர்கால குறிக்கோளை அடையமுடியுமா என்ற கேள்வி எழுகின்றது?

தற்போது அனேகமான வங்கிகள் சேமிப்பு வைப்பிற்கு வருடாந்தம் மிகக் குறைவான வட்டியை வழங்குகின்றன. அதே சமயம் நாட்டில் நிலவும் பணவீக்கம் (வாழ்க்கைச் செலவு உயர்வு) சேமிப்பிற்கு கிடைக்கும் வட்டிக்கு ஒத்ததாக காணப்படுகின்றது. வாழ்க்கைச் செலவு உயர்வு அல்லது பணவீக்கம் என்பது பணத்தின் பெறுமதியை குறிப்பிட்ட சதவிகிதத்தினால் வீழ்ச்சியடைய செய்கின்றது. எனவே நாம் சேமிக்கும் பணத்தை கணக்குகளில் மாத்திரம் வைப்பதன் மூலம் எமது எதிர்கால குறிக்கோள்களை அடையமுடியாதுள்ளது.

மெய்வட்டி = பெயரளவு வட்டி - பணவீக்கம் எனவே நாம் பணவீக்கத்திலும் பார்க்க அதிக வருவாயை வழங்கக்கூடிய முதலீட்டு கருவிகளை அல்லது முதலீட்டு வாய்ப்புக்களை அறிந்து அவற்றில் முதலீடு செய்வது அவசியமாகின்றது.

அவ்வாறாயின் பணவீக்கத்தை விட அதிக வருவாயை உழைக்கக்கூடிய முதலீட்டை எவ்வாறு மேற்கொள்ளலாம்?


உலகளாவிய ரீதியில் மத்திய நீண்ட காலத்தில் பணவீக்கத்தை விட அதிக வருவாயை கொடுக்கக்கூடிய முதலீடுகளில் ஒன்றாக பங்குச்சந்தை முதலீடு காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பங்குச்சந்தை என்றால் என்ன?

பங்குச்சந்தை என்பது கம்பனிகளினால் மூலதனத்தினை திரட்டுவதற்காக பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட பங்குகளை கைமாற்றம் செய்யும் சந்தையாகும். இங்கு கம்பனியிடம் இருந்து ஓர் ஆரம்ப பொது வழங்களில் பங்குகளை கொள்வனவு செய்த ஓர் முதலீட்டாளர் அப்பங்குகளை விற்பனை செய்வதற்கான வாய்ப்புகளை வழங்கும் தளமாகவும் ஆரம்ப பங்குவழங்களில் பங்குகளை கொள்வனவு செய்ய முடியாமற் போன முதலீட்டாளர்களுக்கு பங்குகளை கொள்வனவு செய்யும் தளமாகவும் காணப்படுகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச்சந்தை முதலீட்டின் மூலம் எமக்கு கிடைக்கும் அனுகூலங்கள் என்ன?

## பங்கிலாபம்

பங்குச்சந்தையில் ஒரு நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்யும் பொழுது நீங்கள் அக்கம்பனியின் உரித்துவத்தில் பங்காளியாகின்றீர்கள். இதன் காரணமாக கம்பனி உழைக்கும் இலாபமானது உங்களோடும் பகிர்ந்து கொள்ளப்படும். இவ்வாறு பங்குதாரர்களுடன் இலாபத்தை பகிர்வதற்காக கம்பனிகள் பங்குலாபத்தை வழங்குகின்றன.

## மூலதன இலாபம்

கம்பனிகளின் இலாபம் உழைக்கும் செயற்திறன் அதிகரிக்கும் பொழுது இக்கம்பனிகளின் பங்குகளுக்கான கேள்வி சந்தையில் உயர்வடைந்து அப்பங்குகளின் விலையானது அதிகரிக்கும். இத்தருணத்தில் பங்குகளை கொள்வனவு செய்த முதலீட்டாளர்கள் அப்பங்கின் விலையானது தான் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க அதிக சந்தை விலை காணப்படும்பொழுது அவர் அப்பங்குகளை விற்று ஓர் இலாபத்தினை அடைய முடியும். இதனை நாம் மூலதன இலாபம் எனக்குறிப்பிடுகின்றோம்.

## உரிமை வழங்கல்

இதற்கும் மேலாக கம்பனிகள் தமக்கு மேலதிக மூலதனம் தேவைப்படும் பொழுது ஏற்கனவே பங்குகளை வைத்துள்ள பங்குதாரருக்கு சந்தை விலையிலும் பார்க்க குறைந்த விலையில் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான உரிமையினை வழங்கலாம் இதனை நாம் உரிமை வழங்கல் எனக்குறிப்பிடுவோம்.

## ஒதுக்கங்களை முதலாக்கம் செய்தல்

அத்துடன் கம்பனிகள் காலா காலம் தமது ஒதுக்கத்தில் இருந்து இலவசமாகவும் பங்குதாரர்களுக்கு பங்குகளை வழங்கலாம். இதனை ஒதுக்கங்களை முதலாக்கம் செய்தல் எனக்குறிப்பிடுவோம்.

பங்கு முதலீட்டில் இருந்து நாம் பங்குலாபம், மூலதனலாபம், உரிமை வழங்கல், ஒதுக்கங்களை முதலாக்கம் செய்தல் போன்ற பல்வேறு அனுகூலங்களை பெற்றுக்கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச்சந்தை முதலீட்டில் நாம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் என்ன?

## 1. இடர்நேர்கை

இடர்நேர்கை என்பது பங்குச்சந்தையில் பங்குகளின் விலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வு காரணமாக எமது எதிர்பார்ப்பில் ஏற்படும் மாற்றங்களாகும். இவ் இடர்நேர்கையானது பங்குச்சந்தையுடன் ஒன்றிணைந்த ஓர் பண்பாகும். குறுகிய காலத்தில் இவ்வாறான ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டாலும் சிறந்து இயங்கும் கம்பனிகளில் முதலீடு செய்து அவற்றில் நீண்ட காலம் நிலைத்திருப்பதன் மூலம் இவ் இடர்நேர்கையை தவிர்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. அறிவு பூர்வமான முதலீடு

நாம் ஏற்கனவே குறிப்பிட்டது போல ஒரு கம்பனியில் பங்குகளை கொள்வனவு செய்யும் பொழுது நாம் அக்கம்பனியின் உரிமையாளராக பகுதியளவில் மாறுகின்றோம். ஓர் கம்பனியின் உரிமையாளர் என்ற ரீதியில் அக்கம்பனியின் இலாபத்திலும் நட்டத்திலும் பங்கேற்கின்றோம். எனவே ஓர் கம்பனியின் பங்குகளில் முதலீடு செய்வதற்கு முன்னர் அக்கம்பனி ஈடுபட்டுள்ள வணிகத்தை பற்றியும் உழைக்கக் கூடிய இலாபத்தை பற்றியும் நாம் கருத்திற்கொள்வது அவசியம். இத்தகைய தகவல்களை பங்குத்தரகு நிறுவனங்களில் காணப்படும் ஆய்வுப்பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. பன்முகப்படுத்தல்

பங்குச்சந்தையில் முதலீடு செய்யும் பொழுது நாம் எமது முதலீட்டினை ஒரு கம்பனியினால் வழங்கப்பட்டுள்ள பங்குகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாது பலதுறைகளை சார்ந்த பல கம்பனிகளின் பங்குகளில் முதலீடு செய்வது சிறந்தது. (தற்போது பங்குச்சந்தையில் காணப்படும் 298 கம்பனிகள் 20 துறைகளாக வகுக்கப்பட்டுள்ளன) இதனை நாம் பன்முகப்படுத்தல் எனக்கூறுவோம். இதன் மூலம் பங்குச்சந்தையில் காணப்படும் இடர்நேர்கையை ஓரளவிற்கு குறைக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. பங்குச்சந்தை முதலீடுகள் மத்திய நீண்டகால இலக்கை கொண்டதாக காணப்படல் வேண்டும்

பங்குச்சந்தையில் கைமாற்றம் செய்யப்படும் பங்குகளின் விலைகள் அவற்றிற்கான கேள்வி நிரம்பல் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு கம்பனியினது இலாபம் அதிகரிக்கும் பொழுது அக் கம்பனியின் பங்குளுக்கான கேள்வி சந்தையில் அதிகரித்து அதன் விலைகள் அதிகரிக்கலாம் இதனை நாம் மத்திய நீண்ட காலங்களிலேயே எதிர்பார்க்கலாம். ஓர் கம்பனியானது ஒரு புதிய வணிகத்தில் முதலீடு செய்யும் பொழுது அதிலிருந்து உடனடியாக இலாபத்தை எதிர்பார்க்க முடியாது அம்முதலீட்டின் மூலம் வியாபாரம் விருத்தியடைந்து இலாபமீட்டுவதற்கு சில காலம் செல்லலாம். எனவே முதலீட்டாளர்களாக நாம் இலாபம் உழைக்கக்கூடிய கம்பனிகளின் பங்குகளைத் தெரிவுசெய்து அவற்றில் முதலீடு செய்து அம்முதலீடுகளிலிருந்து சிறந்த இலாபத்தை ஈட்டுவதற்கு மத்திய நீண்ட காலத்தில் நிலைத்திருத்தல் சிறந்தது.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 5. குழப்பமடைதலை தவிர்த்து கொள்ளல்

பங்குச்சந்தையில் மத்திய நீண்ட கால இலக்குடன் தகவலறிந்து முதலீடு செய்யும் பொழுது சந்தையில் தற்காலிகமாக ஏற்படும் விலை வீழ்ச்சியையிட்டு குழப்பமடையாமல் இருப்பது ஓர் முதலீட்டாளருக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்றாகும். நாம் குழப்பமடையும் பொழுது எம்மால் சிறந்த தீர்மானங்களை எடுக்க முடியாமல் போகின்றது. இதன்காரணமாக சிலசமயங்களில் நாம் விற்க வேண்டிய பங்குகளை விற்காமலும் வைத்திருக்கவேண்டிய பங்குகளை விற்றும் விடலாம்.



noolaham.org | aavanaham.org

# நாம் எவ்வாறு பங்குச் சந்தையில் முதலீடு செய்வது?

பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு நாம் ஏதாவது பங்குத்தரகு நிறுவனத்தின் ஊடாக மத்திய வைப்புத்திட்ட கணக்கொன்றை ஆரம்பித்தல் வேண்டும். மத்திய வைப்புத்திட்ட கணக்கானது நாம் கொள்வனவு செய்யும் மற்றும் விற்பனை செய்யும் பங்குகள் பற்றி பதிவுசெய்யும் கணக்காகும். இக்கணக்கொன்றை இலவசமாக ஏதாவது ஓர் பங்குத்தரகு நிறுவனத்தின் ஊடாக ஆரம்பிக்கலாம் (தற்போது 31 பங்குத்தரகு நிறுவனங்கள் இலங்கையில் உள்ளன).

மத்திய வைப்புத்திட்ட கணக்கொன்றை ஆரம்பிப்பதற்கான ஆவணங்கள் என்ன?

1. விண்ணப்பப் படிவம்
2. அடையாள அட்டை பிரதி
3. முகவரியை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம்
4. KYC எனப்படும் வாடிக்கையாளர் பற்றிய தகவல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கினை ஆரம்பித்த பின்னர் நாம் எவ்வாறு பங்குமுதலீட்டினை தொடரலாம்?

முதலாம் தரச் சந்தை

பங்கு கொள்வனவினை நாம் இருவிதமாக மேற்கொள்ளலாம். ஒரு கம்பனியானது தனக்குத்தேவையான மூலதனத்தினை திரட்டுவதற்கான பங்கு வழங்கலை மேற்கொள்ளும்போது நாம் அப்பங்குகளை கொள்வனவுசெய்வதற்கான விண்ணப்பத்தினை மேற்கொண்டு அக்கம்பனிகளிடமிருந்து பங்குகளை கொள்வனவு செய்யலாம். இதனை நாம் முதலாம் தரச் சந்தை அல்லது ஆரம்ப பங்கு வழங்களில் பங்குபற்றல் என அழைக்கின்றோம்.

இரண்டாம் தரச் சந்தை

இவ்வாறு கம்பனிகளினால் போதுமக்களுக்கு வழங்கப்படும் பங்குகள் கொழும்பு பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டு வர்த்தகம் இடம்பெறுகின்றன. இதனை நாம் இரண்டாம் தரசசந்தை என்று அழைக்கின்றோம். இச்சந்தையில் நாம் விரும்பும் பங்குகளை ஓர் பங்குத்தரகர் ஊடாக அன்றைய சந்தை விலையில் கொள்வனவு செய்யலாம்.

முதலீட்டாளர்கள் பங்குகளைக் கொள்வனவு செய்யும் பொழுது பின்வரும் படிமுறைகளை பின்பற்றுதல் சிறந்தது.

1. பங்குத்தரகருடன் கலந்தாலோசித்து கொள்வனவு செய்வதற்கான பங்குகளை தெரிவுசெய்தல் (இலங்கையில் தற்போது பட்டியல்படுத்தப்பட்டுள்ள 292 கம்பனிகளில் ஏதாவது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கம்பனிகளின் பங்குகளைத் தெரிவுசெய்தல்)
2. இவ்வாறு தெரிவுசெய்யப்பட்ட பங்குகளை கொள்வனவுசெய்யுமாறு கொள்வனவுக்கட்டளை ஒன்றை பங்குத்தரகு நிறுவனத்திற்கு பிறப்பித்தல் (உங்களது விருப்பத்திற்கேற்ப விருப்பமான எண்ணிக்கையிலான பங்குகளை கொள்வனவுசெய்யலாம்)
3. பங்கு கொள்வனவு உறுதிசெய்யப்பட்டதன் பின்னர் அதற்குரிய கொடுப்பனவினை பங்குத்தரகு நிறுவனத்திற்கு செலுத்துதல் (T+3, கொள்வனவு இடம்பெற்று 3 வேலை நாட்களுக்குள் செலுத்துதல் வேண்டும்)
4. கொள்வனவு செய்யப்பட்ட பங்குகள் உங்களது மத்திய வைப்புத்திட்ட கணக்கில் வரவு வைக்கப்படும் (கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் பட்சத்தில் மத்திய வைப்புத்திட்ட கணக்கின் கூற்று உங்களுக்கு மாதாந்தம் அனுப்பிவைக்கப்படும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வாறு நாம் மத்திய வைப்புத்திட்ட கணக்கில் உள்ள எமது பங்குகளை விற்பனை செய்யலாம்?

1. நாம் விற்க இருக்கும் பங்குகளின் அன்றைய தினம் காணப்படும் சந்தை விலையை அறிந்துகொள்ளல் (தரகர் ஊடாக அல்லது **CSE** இணையத்தின் ஊடாக)

2. பங்குகளை விற்பனை செய்வதற்கான விற்பனை கட்டளை ஒன்றினை (பங்குகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனை விலை) பங்குத்தரகு நிறுவனத்திற்கு பிறப்பித்தல்

3. பங்குகள் விற்கப்பட்டதன் பின்னர் (**T+3**, மூன்று நாட்களின் பின்னர்) அதற்குரிய பணத்தை காசோலை மூலமாக பங்குத்தரகு நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளல்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குச்சந்தை முதலீட்டின்போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களின் சுருக்கம்



உரிமம் அளிக்கப்பட்ட பங்குத்தரகர்கள் அல்லது முதலீட்டு ஆலோசகர்களுடன் மாத்திரமே கொடுக்கல் வாங்கல்கள் செய்தல் வேண்டும். இவர்கள் பற்றிய தகவல்களை இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் www.sec.gov.lk என்ற இணையத்தினூடாக அல்லது கொழும்பு பங்குச் சந்தையின் www.cse.lk என்ற இணையத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம்.



கணக்கொன்றினை ஆரம்பிப்பதற்கு அவசியமான தகவல்கள் மற்றும் பங்கு வர்த்தகம் செய்வதற்கான கொள்வனவு விற்பனை கட்டளைகளை உரிமம் அளிக்கப்பட்ட பங்குத்தரகர்கள் அல்லது முதலீட்டு ஆலோசகர்களுக்கு சமர்ப்பித்தல்.



என்நேரத்திலும் சமீபத்திய பங்குச் சந்தை தகவல்களை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.



முதலீட்டிலிருந்து அதிகூடிய வருமானத்தை பெற்றுத் தருவதாக வழிநடத்தும் முகவர்கள் தொடர்பில் அவதானமாக இருங்கள்.



உங்களது பங்கு கொள்வனவிற்கான பணத்தை பங்குத்தரகு நிறுவனத்திற்கு மாத்திரமே செலுத்துதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SEC | SECURITIES AND EXCHANGE COMMISSION OF SRI LANKA

Address : Level 28 and 29, East Tower,
World Trade Centre, Echelon Square,
Colombo 01, Sri Lanka.
Telephone : +94 11 2143843
Fax : +94 11 2439149
Email : mail@sec.gov.lk
Web : www.sec.gov.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org